


# விமர்சனம்



சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டு துன்புறுத்தப்படும் சிறுவன், வளர்ந்த பிறகு பவானி (விஜய் சேதுபதி) என்ற பெயரில் பெரிய கொலைகாரனாகிவிடுகிறான்.

தன் தீய செயல்களுக்கு சீர்திருத்தப் பள்ளியில் இருக்கும் சிறுவர்களையே பயன்படுத்திக்கொள்கிறான். அங்கு வரும் புதிய ஆசிரியரான ஜான் துரைராஜ் (விஜய்), பவானியை வீழ்த்தி எப்படி சிறுவர்களைக் காக்கிறார் என்பதுதான் படம்.

படத்தின் தொடக்கம் பவானியின் டெரரான அறிமுகத்தோடு அதிரடியாகவே தொடங்குகிறது. கதாநாயகனின் அறிமுகமும் கலகலப்பாகவே இருக்கிறது. ஆனால், படம் ஆரம்பமாகி ஒரு மணி நேரம் ஆன பிறகும், திரைக்கதை மையக் கதையை



நோக்கிச் செல்லாமல் இழுத்துக்கொண்டே செல்வது அலுப்பூட்ட ஆரம்பிக்கிறது.

இடைவேளைக்குப் பின் மெல்ல மெல்ல சூடுபிடிக்க ஆரம்பிக்கிறது திரைக்கதை. ஆனால், எந்த இடத்தில் க்ளைமேக்ஸ் வர வேண்டுமோ அதையும் தாண்டி படம் நீண்டு கொண்டே செல்வதுதான் சிக்கல். குறிப்பாக க்ளைமேக்ஸிற்கு முந்தைய சுமார் 20 நிமிடக் காட்சிகள் அவ்வளவு விறுவிறுப்பாக இல்லை. ஒரு கட்டத்தில் இதற்கு எப்போதுதான் முடிவு என எதிர் பார்க்கும்படி ஆகிவிடுகிறது.

பவானியாக விஜய் சேதுபதி தன் வழக்கமான நக்கல் கலந்த நடிப்பைப் பின்பற்றியே மிரட்டியிருக்கிறார். அது வில்லன் பாத்திரத்துக்கும் பொருத்தமாகிறது. 'இரும்புக் கை மாயாவி'யாக ஒவ்வொருவரையும் பலி வாங்கும்போதும் பதைபதைப்பை ஏற்படுத்துகிறார். “2 நிமிஷம் டைம் தரேன்” என அவர் ஒவ்வொருமுறை சொல்லும்போதும், விஜய்கே “ஐ யம் வெயிட்டிங்” சொல்லும் போதும் கைத்தட்ட வைக்கிறது.

இந்தப் படம் சிக்கலான திரைக்கதையைக் கொண்ட ஒரு திரைப்படமல்ல. மாறாக, நல்லவன் VS கெட்டவன் என்ற வழக்கமான மோதலைக் கொண்ட ஒரு திரைப்படம். அதிலும், பவானியின் பாத்திரம் ரொம்பவும் பழகிப்போன வில்லன் பாத்திரம்தான் என்றாலும், அதில் விஜய் சேதுபதி நடித்திருப்பதால் சற்று தனித்துத் தெரிகிறது.

விஜய் சேதுபதியைத்தான் தேடிக்கொண்டிருக்கிறோம் என்றே தெரியாமல் விஜய் சேதுபதியின் கழுத்தில் பேனா வைத்தபடியே விஜய் பேசும் காட்சி சிறப்பு. உணர்ச்சிவசத்தால் குற்றச்செயல்களில் ஈடுபடும் சிறுவர்களை சமூகம் எப்படித் தொடர் குற்றவாளிகளாக மாற்றுகிறது எனவும், குடிக்குப் பின்னால் இருக்கும் அரசியலையும் லோகேஷ் பேசியிருப்பதற்குப் பாராட்டுகள்.

கல்லூரி பேராசிரியராகவும் சீர்திருத்தப்பள்ளியின் ஆசிரியராகவும் வரும் விஜய், பத்து வயது குறைந்தவரைப் போல இருக்கிறார். மிகச் சிறப்பாக நடனமாடுகிறார். எதிரிகளைத் துவம்சம் செய்கிறார்.

படத்தின் கதாநாயகியைப் போல வரும் மாளவிகா மோகனனுக்கு சொல்லும்படி ஏதும் வேலையில்லை. ஆண்ட்ரியா, நாசர் போன்ற முக்கியமான கலைஞர்கள் சில காட்சிகளில் மட்டும் தலைகாட்டிவிட்டு மறைந்துவிடுகிறார்கள்.

அனிருத்தின் பின்னணி இசை அட்டகாசம். திரைக்கதையோடு சேர்ந்துவரும் சில பாடல்களும் சிறப்பாக இருக்கின்றன.

பெரிதாக யாராலும் கவனிக்கப்படாத சிறுவர் சீர்திருத்தப் பள்ளியை மையமாக வைத்து, ஒரு கதையைச் சொல்லியிருப்பது நல்ல விஷயம்தான். ஆனால், தளர்வான திரைக்கதையின் காரணமாக, சற்று ஏமாற்றமளிக்கிறது படம். ஆனால், இந்த குட்டி ஸ்டோரியை லோகேஷ் கனகராஜ் 3 மணி நேர மிக நீண்ட ஸ்டோரியாக்கியிருக்கிறார்.



**‘கூல்’ கல்லூரி வாத்தி, திடீரென ‘கூர்நோக்கு’ இல்ல வாத்தியாகி வில்லன்களை எப்படி ஒழித்துக்கட்டுகிறார் என்பதே ‘மாஸ்டர்’ படத்தின் குட்டி ஸ்டோரி. ஆனால், இந்த குட்டி ஸ்டோரியை லோகேஷ் கனகராஜ் 3 மணி நேர மிக நீண்ட ஸ்டோரியாக்கியிருக்கிறார்.**